## கூட்டுறவுச் சங்கங்களுக்கான இடைத் தேர்தல்

## செப்டம்பர்'29 ல் வேட்புமனுத்தாக்கல்

## அக்டோபர்' 6 ல் வாக்குப்பதிவு

## மாநிலத் தேர்தல் ஆணையர் அறிவிப்பு

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் காலியாக உள்ள நிர்வாகக்குழு உறுப்பினர்கள், தலைவர்கள், துணைத்தலைவர்கள் ஆகிய பதவிகளை நிரப்புவதற்கான இடைத்தேர்தல் அக்டோபர்'6–ம் தேதி அன்று நடைபெறும் என்றும், இதற்கான வேட்புமனுத்தாக்கல் செப்டம்பர்'29-ம் தேதி அன்று நடைபெறும் என்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு.ம.ரா.மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு :-

### காலிப் பணியிடங்கள்

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஐந்து நிலைகளில் நடைபெற்ற தேர்தலில் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களிலிருந்து தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்களில் சிலர் இறந்துவிடுதல் அல்லது தங்கள் பதவியை ராஜினாமா செய்தல் போன்ற காரணங்களால், அவர்கள் வகித்துவந்த பதவிகளில் காலிப்பணியிடங்கள் ஏற்பட்டன. இவ்வாறாக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் மீன்துறை ஆணையர், கூட்டுறவுச் சங்கங்களின்பதிவாளர்(வீட்டுவசதி), கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், தொழில் துறை மற்றும் தொழில் வணிகத்துறை இயக்குநர், சர்க்கரைத்துறை இயக்குநர் மற்றும் பால்வளத்துறை ஆணையர் ஆகிய செயற்பதிவாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள **536** கூட்டுறவுச் சங்கங்களில் **937** நிர்வாகக்குழு உறுப்பினர் பணியிடங்களும், **168** கூட்டுறவுச் சங்கங்களில் **108** தலைவர் மற்றும் **66** துணைத்தலைவர் பணியிடங்களும் தற்போது காலிப்பணியிடங்களாக உள்ளன.

### இடைத்தேர்தல்

மேற்குறிப்பிட்ட **937** நிர்வாகக்குழு உறுப்பினர் பணியிடங்களையும், **108** தலைவர் மற்றும் **66** துணைத்தலைவர் பணியிடங்களையும் இடைத்தேர்தல் மூலம் நிரப்புவதற்கான தேர்தல் திட்டத்தையும், தேர்தல் அட்டவணையையும் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது . அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலர்கள் இது தொடர்பான தேர்தல் அறிவிப்பினை வெளியிட்டுள்ளனர்.

இந்த 937 நிர்வாகக்குழு உறுப்பினர் காலிப்பணியிடங்களில் 344 பணியிடங்களுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவரும், 195 பணியிடங்களுக்கு பெண்களும் மற்றும் 398 பணியிடங்களுக்கு பொதுப்பிரிவினரும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தலில் வகுப்புவாரி இட ஒதுக்கீடு கிடையாது.

## வேட்புமனுத் தாக்கல்

இந்த இடைத்தேர்தலுக்கான வேட்புமனுக்களை 29.09.2014 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை தாக்கல் செய்யலாம். அன்று மாலை 5.30 மணிக்குள் வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு அன்று மாலை 6.00 மணிக்கு தகுதியான வேட்பாளர் பட்டியல் தேர்தல் அலுவலரால் வெளியிடப்படும்.

## வேட்புமனு திரும்பப்பெறுதல்

தாக்கல் செய்த வேட்புமனுவை திரும்பப் பெற விரும்புவோர் 30.09.2014 காலை 10.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். அன்று மாலை 5.00 மணிக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப்பட்டியல் தேர்தல் அலுவலரால் வெளியிடப்படும்.

## வாக்குப்பதிவு

இந்த இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு 06.10.2014 அன்று காலை 8.00 மணிக்குத் தொடங்கி மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

## வாக்கு எண்ணிக்கை

இந்த இடைத்தேர்தலில் 06.10.2014 அன்று பதிவான வாக்குகளை எண்ணும் பணி மறுநாள், அதாவது 07.10.2014 காலை 10.00 மணிக்குத் தொடங்கும். வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்டவுடன் முடிவுகள் அறிவிக்கப்படும்.

## தலைவர், துணைத்தலைவர் தேர்தல்

தலைவர் மற்றும் துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அறிவிப்பு 07.10.2014 அன்று தேர்தல் அலுவலரால் வழங்கப்படும். தலைவர் மற்றும் துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 11.10.2014 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

இடைத்தேர்தல் நடைபெறவுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பெயர் மற்றும் இதர விபரங்கள் குறித்து அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலரையும், மாவட்ட தேர்தல் பார்வையாளர்களான மண்டல இணைப்பதிவாளர்களையும் தொடர்பு கொள்ளலாம்.

## ஏழு இடைத்தேர்தல்கள்

தற்பொழுது நடைபெறவுள்ள இடைத்தேர்தல் அல்லாமல் கடந்த ஆகஸ்ட் ‘2013 முதல் இதுவரை கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏழு முறை இடைத்தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் **5648** கூட்டுறவுச் சங்கங்களில் காலியிடம் ஏற்பட்ட **11483** நிர்வாகக்குழு உறுப்பினர் பதவிகளை நிரப்பிட தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. இடைத்தேர்தல்கள் மூலமாக **259** கூட்டுறவு சங்கங்களில் **174** தலைவர் பதவிகளையும், **98** துணைத்தலைவர் பதவிகளையும் நிரப்பிட தேர்தல் நடத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது நடைபெறவுள்ளது **எட்டாவது** இடைத்தேர்தல் ஆகும்.

மேற்கண்டவாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு. ம.ரா. மோகன், இ.ஆ.ப. (ஓய்வு) தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(ஒம்./..)
**ஆணையர்.**

**கூட்டுறவுச் சங்கங்களுக்கான இடைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள நிர்வாகக்குழு உறுப்பினர்கள்,**

**தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள் எண்ணிக்கை விவரம்**

| வ.எண். | மாநில தேர்தல் அலுவலரின் பெயர் | இடைத்தேர்தல் நடைபெற உள்ள சங்கங்களின் எண்ணிக்கை | இடைத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப் பட வேண்டிய நிர்வாகக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை | தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் பிரிவு | | | | இடைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய தலைவர்/ துணைத்தலைவர் விவரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் | மகளிர் | பொது | கூடுதல் | சங்கங்களின் எண்ணிக்கை | தலைவர் | துணைத் தலைவர் |
| 1. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 255 | 278 | 54 | 66 | 158 | 278 | 95 | 49 | 49 |
| 2. | மீன்துறை ஆணையர் | 19 | 21 | 15 | 1 | 5 | 21 | 0 | 0 | 0 |
| 3. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்(வீட்டுவசதி) | 18 | 28 | 12 | 7 | 9 | 28 | 7 | 6 | 1 |
| 4, | கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் | 26 | 53 | 2 | 10 | 41 | 53 | 14 | 10 | 7 |
| 5. | தொழில் துறை மற்றும் தொழில் வணிகத்துறை இயக்குநர் | 6 | 7 | 0 | 2 | 5 | 7 | 2 | 1 | 1 |
| 6. | சர்க்கரைத்துறை இயக்குநர் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 |
| 7. | பால்வளத்துறை ஆணையர் | 211 | 549 | 261 | 109 | 179 | 549 | 50 | 42 | 8 |
| | கூடுதல் : | 536 | 937 | 344 | 195 | 398 | 937 | 168 | 108 | 66 |

(ஒம்./..)
ஆணையர்.